**Embassy of the United States of America**
**Colombo**
**PRESS RELEASE**
**Public Affairs Section**
**Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070**
Email: Mahoneyhr@state.gov ● http://lk.usembassy.gov

**ஊடக அறிக்கை இல. 08292018**

## ‘ஹை என்டியூரன்ஸ் கட்டர்’ கப்பலை இலங்கை கடற்படையிடம் கையளித்தது அமெரிக்கா

**ஹொனலுலு, ஒகஸ்ட் 29:** அமெரிக்க கரையோர பாதுகாப்புப் படைப்பிரிவினர் முன்னர் USCGC Sherman என்றழைக்கப்பட்ட ‘ஹை என்டியூரன்ஸ் கட்டர்’ கப்பலை ஒகஸ்ட் 27ஆம் திகதி இலங்கை கடற்படையினரிடம் கையளித்தனர். இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவான் ரணசிங்க மற்றும் அமெரிக்க கரையோர பாதுகாப்பு படைப்பிரிவின் ரியர் அட்மிரல் மைக்கேல் ஹேய்கொக் ஆகியோர் தலைமையில் இந்த கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. அமெரிக்க மக்களால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ள இந்த கட்டர் கப்பலானது இலங்கை கடற்படையில் உள்ள மிகப்பெரிய கப்பலாக அமையவிருப்பதுடன், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பையும் வலுப்படுத்துகிறது. இந்தக் கப்பலானது இலங்கை தமது பிரத்தியேக பொருளாதார வலயத்தில் மேற்கொள்ளும் ரோந்து நடவடிக்கைகளுக்கான ஆற்றலை அதிகரிக்கும் என்பதுடன், இந்து சமுத்திரத்தின் கப்பல் பயணப் பாதைகள் ஊடாக பயணிக்கும் ஏனைய நாடுகளின் கப்பல்களுக்கும் மேலதிக பாதுகாப்பை வழங்குவதாகவும் அமைந்திருக்கும். 115 மீற்றர் நீளத்தைக் கொண்ட இந்த கப்பல் 167 பேர் கொண்ட பணிக்குழு தாங்கிச் செல்லக்கூடியது.

ஒரு மாதத்துக்கு மேலாக 110 இலங்கை கடற்படையினர் ‘ஷேர்மன்’ கப்பல் குழுவினருடன் இணைந்து இந்த கப்பலை செயற்படுத்துவது தொடர்பான பயிற்சிகளை முன்னெடுத்திருந்தனர். 2018 ஜூலையில் இடம்பெற்ற அமெரிக்காவின் பசுபிக் வளைய கடற்படை பயிற்சி நடவடிக்கையில் (RIMPAC 2018) இலங்கையின் முதன் முறையான பங்கேற்பின் அடிப்படையில் இந்தக் கையளிப்பு அமைந்திருந்ததுடன், இது இருநாட்டு கடற்படையினருக்கும் இடையிலான செயற்றிறனை அதிகரிப்பதாகவும் இருக்கும்.

கட்டர் கப்பல் புறப்படும் தினம் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அமையவுள்ளது. பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் அதேபோல், கப்பல் குழுவினருக்கான பயிற்சிகள் என்பன அதுவரை தொடரவுள்ளன. இந்தக் கப்பல் அன்பளிப்பாக வழங்கப்படும் என்பதை அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான முன்னாள் உதவி இராஜாங்க செயலாளர் தோமஸ் ஷெனன், 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற அமெரிக்க - இலங்கை பங்காண்மை கலந்துரையாடலின் போது முதன்முறையாக அறிவித்தார். இந்த புதிய கப்பலானது எஸ்.எல்.என்.எஸ். சமுத்ரா (SLNS Samudura) கப்பலுடன் இணைந்துகொள்ளவுள்ளது. SLNS Samudura வும் 2004 ஆம் ஆண்டு இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட முன்னாள் அமெரிக்க கரையோர பாதுகாப்பு கப்பலொன்றாகும்.

இலங்கையுடனான நீடித்த நட்புறவை தொடர்ந்தும் பேணுவதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் உறுதிப்பாட்டுடன் இருப்பதுடன், எமது இரு நாடுகளிலும் இந்த பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் உள்ள மக்களுக்கான பாதுகாப்பையும் சுபீட்சத்தையும் மேம்படுத்துவதற்கு நாம் தொடர்ந்தும் ஒன்றிணைந்தும் செயற்படுவோம்.

இணைப்பு: https://lk.usembassy.gov/remarks-u-s-sri-lanka-partnership-dialogue/